# ஆற்றுப்படை நூல்களின் இலக்கணம்

**சே. சத்யா**
தமிழ் ஆய்வியல் நிறைஞர்
மயிலம் தமிழ்க் கல்லூரி
மயிலம்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

பண்டைத் தமிழர்கன் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் கருவிகளாக விளங்குபவை சங்க இலக்கியங்கள், அவ்வியலக்கியங்கள் பாட்டும், தொகையும் என்று குறிப்பிடப்படும். பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவை மிகப் பழமையானவை. நவீன காலங்களில் எத்தனையோ இலக்கிய வகைகள் தோன்றிய பிறகும் என்றும் இளமை மாறாமல் புதுப்பொலிவுடன் காணப்படுவது சங்க இலக்கியங்கள் ஆகும்.

பத்துப்பாட்டு நூல்கள், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநால்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்ற கூத்தராற்றுப்படை, மலைபடுகடாம் ஆகும். இவற்றுள் முதல் நான்கு நூல்களும் இறுதியாக வரும் மலைபடுகடாமும் ஆக ஐந்து நூல்களும் ஆற்றுப்படை நூல்களாகும். பத்துப்பாட்டில் செம்பாதியாக ஆற்றுப்படை நூல்கள் விளங்குகின்றன.

## ஆற்றுப்படை

ஆற்றுப்படை என்பது ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லானது (ஆறு – வழி படை – படுத்தல், சேர்த்தல்) வழிப்படுத்தல், வழியிற் செலுத்துதல் என்ற பொருளைக் குறிப்பதாக நச்சினார்க்கினியர் கூறிகிறார். இவரது கருத்திற்கு வலுசேர்ப்பதாக எஸ்.வையாபுரிப்பிள்ளை, மு.இராகவஜயங்கார், அ.மு.பரமசிவனானந்தம், கி.வா.ஜகந்நாதன் முதலியோரும் கூறுவதிலிருந்து பரிசில் பெறப் போகும் கலைஞனுக்குப் பரிசில் பெறும் வழியைப் கூறுவதே ஆற்றுப்படை என்பதை அறியலாம்.

## ஆற்றுப்படையின் தோற்றம்

“ஆற்றுப்படை என்ற ஓர் இலக்கிய மரபினை நாம் வேறு எம்மொழியிலும் காண இயலாது. அது தமிழுக்கே தனிச்சிறப்பாக அமைந்தாகும்” என்பார் சி.பாலசுப்பிரமணியம். கலையில் தேர்ச்சிப் பெற்ற கலைஞர்கள் தம்முடைய கலைத்திறனை ஆதரிப்பாரின்றி வறுமையில் வாடினர். இதைக் கண்ட புலவர்கள் தம்முடைய பாடல்களால் கலைஞர்களின் வறுமை நிலையை வள்ளல்களும், அரசர்களும் அறியுமாறு பாடினர். இப்பாடல்கள் கலைஞர்களும் வறுமையைக் கூறுவதாகவும், வள்ளல் மற்றும் அரசர்களின் பெருமைகளைக் கூறுவதாகவும் அமைந்தன. இதனால் அரசர்கள்

கலைஞர்களின் வறுமை நீங்க, அவர்களுக்குப் பொன், பொருள் போன்ற பரிசில்களையளித்துப் பாதுகாத்து அவர்களின் கலைத்திறனை வளரச் செய்தனர். இவ்வாறு பரிசில் பெற்ற கலைஞன் தான் மட்டும் இன்பம் அடையாமல் வறுமையிலிருந்த கலைஞனைக் குறிப்பட்ட அரசனிடம் வழிப்படுத்தினான். அவ்வாறு வழிப்படுத்தியதே ஆற்றுப்படை என்ற மரபு தோன்றக் காரணமாயிருந்தது.

ஆரசனை மட்டுமே வாழ்த்திப் பாடிவந்த ஆற்றுப்படை மரபானது பின்னாளில் தெய்வம், புலவர், நெஞ்சம், தனிநபர் மீது பாடும் ஒரு சிற்றியக்கிய மரபாக புத்தாக்கம் பெற்றது. தொடக்கக் காலத்தில் பாடாண் திணையின் துறைகளில் ஒன்றாக இருந்த ஆற்றுப்படை மரபானது பின்னர் தனி இலக்கியமாகத் திகழ்ந்து பின்னர் பிரபந்தமாக வளர்ச்சியடைந்துள்ளது.

**ஆற்றுப்படை இலக்கணம்**

ஆற்றுப்படையின் இன்றியமையாத நோக்கம், பரிசில் பெற்ற கலைஞன் பரிசில் பெறாதவனை வழிப்படுத்துவதாக அமைகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயற்றல் என்பதன்படி தொல்காப்பியம் முதற்கொண்டு பாட்டியல் நூல்களும் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளன.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியத்தில் இரண்டு இடங்களில் ஆற்றுப்படைக்கு இலக்கணம் உரைக்கப்பட்டுள்ளது. பாடாண் திணையை விளக்க வரும் தொல்காப்பியர்,

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”[2]**

என்று குறிப்பிடுக்கின்றார். கூத்தர், பாணர், பொருநர், விறலி முதலிய கலைஞர்கள் பரிசில் பெற்று வரும் வழியில் எதிரில் கண்ட பரிசில் பெறாத கலைஞனைப் பரிசில் பெற வழிப்படுத்துவது ஆற்றுப்படை என்று ஆற்றுப்படைக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். இதற்கு “கூத்தராயினும், பாணராயினும், பொருநராயினும், விறலியராயினும், நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனவும் சொன்ன பக்கமும்” என்றும், “பக்கம்” என்பதற்கு “ஆற்றினது அருமையும், அவன் ஊரின் பண்பும் கூறப்படும்”[3] என்றும் இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். மேலும், இதற்கு “ஆடன் மாந்தரும், பாடற்பாணரும், கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியும், நாற்பாலரும் தாம் பெருஞ்செல்வத்தை எதிர் வந்த வறியோருக்கு அறிவுறுத்தி அவரும் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடு”[4] என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுகின்றனர்.

ஆற்றுப்படையின் துறையைக் பற்றி புறத்திணையில் கூறிய தொல்காப்பியர், எச்சவியலில் அதற்குச் சிறப்பு இலக்கணத்தையும் கூறியுள்ளார். இங்கு, ஆற்றுப்படை என்ற சொல்லை கையாண்டுள்ளார். அதுவே,

**“முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவிக்
பன்மையொடு முடியினும் வரைநிலையின்றே
ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்”[5]**

என்பதாகும். முன்னிலையில் வழங்கிய ஒருமைச் சொல் பன்மையில் முடிந்தால் ஆற்றுப்படையில் ஏற்றுக்கௌ்ளலாம் என்று ஆற்றுப்படைக்குச் சிறப்பு இலக்கணத்தை வகுத்துள்ளார். தொல்காப்பியர் இரு இடங்களில் ஆற்றுப்படை பற்றிக் கூறியுள்ளதால் அவர் காலத்திலோ, முன்னரோ ஆற்றுப்படை மரபு வழக்கில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**புறப்பொருள் வெண்பாமாலை**

தொல்காப்பியர் கூறிய கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய கலைஞர்களோடு புலவரையும் சேர்த்து பாணர், கூத்தர், பொருநர், விறலி, புலவர் என்று முறைவைப்பையும் புறப்பொருள் வெண்பாமாலை மாற்றிக் கூறுகின்றது.

**பாணாற்றுப்படை**

"சேணோக்கிய வரையதரிற்
புாணனை ஆற்றுப்படுத்தன்று"[6]

**கூத்தராற்றுப்படை**

"ஏத்திச் சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுப்படுத்தன்று"[7]

**பொருநராற்றுப்படை**

"பெருநல்லான் உழையீராகெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று"[8]

**விறலியாற்றுப்படை**

"திறல் வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப்படுத்தன்று"[9]

**புலவராற்றுப்படை**

"இருங்கண் வானத் திமையோருழைப்
பெரும் புலவனை ஆற்றுப்படுத்தன்று"[10]

என்று புறப்பொருள் வெண்பாமாலை ஒவ்வொரு கலைஞருக்கும் தனித்தனியே இலக்கணத்தை வகுத்துள்ளது. மேலும், கூத்தரை இரவலன் என்றும், ஆடலில் சிறப்புப் பெற்ற விறலி அரசனை வாழத்திப் பாடுவாள் என்றும், கலைஞர்கள் செல்லும் வழி, பரிசில் போன்ற செய்திகளும் புறப்பொருள் வெண்பாமாலையில் காணப்படுகின்றன.

**பன்னிரு பாட்டியல்**

கி.பி.10ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிருபாட்டியல் ஆற்றுப்படைக்கு இலக்கணத்தை வகுக்கும் போது புறப்பொருள் வெண்பாமாலை கூறிய செய்திகளைப் பின்பற்றி முறைவைப்பை மட்டும் மாற்றி இலக்கணத்தை வகுத்துள்ளது.

**"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட**
**இரவலன் வெயில்தோறும் இருங்கானத்திடை**
**வறுமையுடன் வருஉம் புலவர் பாணர்**
**பொருநர் விறலியர் கூத்தர் கண்டுஅப்**
**புரவலன் நாடுஊர் பெயர்க் கொண்ட பராஅய்**
**ஆங்கு நீர் செல்க என விடுப்பது ஆற்றுப்படை"[11]**

என்று புலவரை முதன்மையாகக் காட்டி இலக்கணம் வகுக்கிறது. மேலும், ஆற்றுப்படை அகவற்பாவில் மட்டும் வரவேண்டும் என்பதை "ஓங்கிய அதுதான் அகவலின் வருமே"[12] என்றும், புலவராற்றுப்படை தெய்வங்களை நோக்கியும் பாடப்படும் என்பதை புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே"[13] என்றும் இலக்கணம் கூறுகிறது.

**வெண்பாப்பாட்டியல்**

12ஆம் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப்பாட்டியல் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

**"ஒன்றாம் அகவலா ஒண்புலவர் யாழ்ப்பாணர்**
**குன்றாத சீர்ப் பொருநர் கூத்தரே என்றிவரை**
**ஆங்கொருவன் ஆற்றுப்படுத்த பரிசறைந்தால்**
**பாங்காய ஆற்றுப்படை"[14]**

என்று புலவர், பாணர், பொருநர், கூத்தர் ஆகியோர் மட்டும் ஆற்றுப்படைக்குரியவர் என்று குறிப்பிட்டு விறலியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும், புலவரை ‘‘ஒண்புலவர்’’ என்றும், பாணரை ‘‘யாழ்ப்பாணர்’’ என்றும், பொருநரைக் ‘‘குன்றாத சீர்ப்பொருநர்’’ என்றும் அடைமொழியோடு குறிப்பதுடன் ஆற்றுப்படுத்துவோனை ‘‘ஆங்கொருவன்’’ என்றும் குறிப்பிடுகிறது.

**நவநீதப்பாட்டியல்**

14ஆம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப்பாட்டியல், ஆற்றுப்படை ஆசிரியப்பாவால் அமைய வேண்டும் என்பதையும், ஆற்றுப்படைக்குரியோரைப் பற்றியும் கூறியுள்ளது. இதனை,

**“..........புலவர்கள் வாழ்த்து நலம்**
**நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை நீள்நிதியம்**
**பெறும்படி ஆற்றுப்படுப்பன ஆசரியம் பெறுமே”[15]**

என்ற நூற்பாவால் அறியலாம். இதில், புலவர், பொருநர், பாணர் கூத்தர் போன்றோரை மட்டும் கூறி விறலியைப் பற்றிக் கூறப்படவில்லை. மேலும், மற்ற இலக்கண நூல்களில் குறிப்பிடும் கலைஞர்கள் செல்லும் வழி, பரிசில் போன்றவை பற்றிய குறிப்புகளும் காணப்படவில்லை.

**சிதம்பரப் பாட்டியல்**

**“16ஆம் நூற்றாண்டில் தோன்றி சிதம்பரப்பாட்டியல்,**
**புகழ கவலாற் புலவர் பாணர் கூத்தர்**
**பொருநர் முதல வரையாற் றெதிர்ப் பாடாகப்**
**பகருமத தாற்றுப் படையாம்”[16]**

என்று இலக்கணம் கூறுகின்றது. இதில் புலவர், பாணர், கூத்தர், பொருநரை மட்டும் குறிப்பிட்டு விறலியைப் பற்றி குறிப்பிடவில்லை. மேலும், கலைஞர்கள் செல்லும் வழி, பரிசில் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிடாமல் ஆசிரியப்பாவில் மட்டும் அமையும் என்பதைக் குறிப்பிட்டுள்ளது.

**இலக்கண விளக்கப் பாட்டியல்**

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலானது தொல்காப்பியர் கூறிய செய்திகளைக் கூறுவதோடு தொல்காப்பிய நூற்பா அடிகளைத் தொடர்ந்து பின்பற்றியும் உள்ளது.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்**
**பேற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
**சென்றெதிரத் தெரிந்த ஆற்றுப்படையும்”[17]**

என்று ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

**தொன்னூல் விளக்கம்**

18ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொன்னூள் விளக்கம் தொல்காப்பியர் கூறிய செய்திகளோடு விறலியை நீக்கி புலவரைச் சேர்த்துள்ளது.

**“ஆற்றுப் படையென்ப வாற்றெதிர்ப் படுத்திய**
**புலவர் பாணர் பொருநர் கூத்தர்**
**புல புகழகவற் பாவொரு பாடலே”[18]**

என்று கூறுவதுடன் ஆற்றுப்படை ஆசிரியப்பாவில் வரவேண்டும் என்று வரையறை செய்கின்றது.
இதே போல் முத்துவீரியம், பிரபந்த தீபிகை போன்றவையும் தொல்காப்பியத்தை பின்படுத்தி ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளன.

**முடிவுரை**

ஆற்றுப்படுத்தப்படுவோரைக் கொண்டு ஆற்றுப்படையின் பெயர்கள் பாணர், கூத்தர், விறலியர், பொருநர், புலவர் என்று ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் புலவரைத் தொல்காப்பியர் ஆற்றுப்படுத்தப்படவில்லை. ஆற்றுப்படுத்தும் போது பாணன் பாணனுக்கும், பொருநன் பொருநனுக்கும், கூத்தன் கூத்தனுக்கும், விறலி விறலிக்கும் ஆற்றுப்படுத்தப்படுவது இலக்கிய மரபாகும். இதனை ஒட்டியே சங்க இலக்கிய ஆற்றுப்படைப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆற்றுப்படையின் பெயர்கள் அனைத்தும் விளியாலும், கலைஞர்கள் கையாண்ட கருவிகளாலும் பாகுபடுத்தப்பட்டுள்ளன.
விளிப்பெயர் -> பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தாற்றுப்படை, விறலியாற்றுப்படை.
கருவிப்பெயர் -> பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை.

சங்க இலக்கியத்திலுள்ள 27 ஆற்றுப்படை பாடல்களில் எட்டுத்தொகையில் 14 பாடல்களும் (பாணர்-8, விறலி-4, புலவர்-2), பதிற்றுப்பத்தில் எட்டு பாடல்களும் (பாணர்-2, விறலி-6), பத்துப்பாட்டில் ஐந்து பாடல்களும் (திருமுருகு-1, பாணாற்றுப்படை-2, கூத்தாற்றுப்படை-1, பொருநாற்றுப்படை-1) உள்ளன. இவற்றுள் தொல்காப்பியர் குறிப்பிடாத புலவராற்றுப்படையை நீக்கினால் 24 ஆற்றுப்படை பாடல்கள் கலைஞரை ஆற்றுப்படுத்துகின்றன என்பதை இவ்வாய்வின் மூலமாக அறியலாம்.

**குறிப்புகள்:**

1. பாலசுப்பிரமணியம்.சி, தமிழ் இலக்கிய வரலாறு, ப.56
2. தொல், பொருள் - புறத், நூ.36
3. மேலது, இளம்பூரணர் உரை, ப.149
4. மேலது, நச்சினார்க்கினியர், ப.282
5. தொல், சொல் - எச்ச – நூ.66
6. புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், கொளு.28
7. மேலது, கொளு.29
8. மேலது, கொளு. 30
9. மேலது, கொளு.31
10. மேலது, கொளு.42
11. பன்னிருபட்டியல், நூ.320
12. மேலது, நூ.321
13. மேலது,
14. வெண்பாப்பாட்டியல், நூ.51
15. சிதம்பரப்பாட்டியல், மரபியல், நூ.8
16. இலக்கண விளக்கப் பாட்டியல், புறத்திணை, நூ.18
17. புறநானூறு, பா.68, வரி.4